प्रेस प्रकाशनी PRESS RELEASE

भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
वेबसाइट : www.rbi.org.in/hindi
Website : www.rbi.org.in
ई-मेल/email : helpdoc@rbi.org.in

**संचार विभाग,** केंद्रीय कार्यालय, शहीद भगत सिंह मार्ग, फोर्ट, मुंबई - 400 001
**Department of Communication**, Central Office, Shahid Bhagat Singh Marg, Fort, Mumbai - 400 001 फोन/Phone: 022 - 2266 0502

05 **டிசம்பர்** 2024

# பத்திரிக்கை வெளியீடு

## தமிழ்நாடு, குளித்தலை கூட்டுறவு நகர வங்கி மீது இந்திய ரிசர்வ் வங்கி பண அபராதம் விதிக்கிறது

இந்திய ரிசர்வ் வங்கியின், 'பங்கு மூலதனம் மற்றும் பத்திரங்களை வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் - முதன்மை (நகர்ப்புற) கூட்டுறவு வங்கிகள்' தொடர்பான உத்தரவுகள் மற்றும் 'மேற்பார்வை செயல் கட்டமைப்பின்' கீழ் வழங்கப்பட்ட சில உத்தரவுகளை கடைபிடிக்காததற்காக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ), டிசம்பர் 04, 2024 தேதியிட்ட உத்தரவு மூலம், குளித்தலை கூட்டுறவு நகர வங்கி (வங்கி) மீது ₹1,00,000 (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) அபராதம் விதித்துள்ளது. இந்த அபராதமானது, இந்திய ரிசர்வ் வங்கி, 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 47 A (1) (c) உடன் இணைந்த பிரிவு 46 (4) (i) மற்றும் பிரிவு 56 இன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி விதித்துள்ளது.

மார்ச் 31, 2023 தேதியில் வங்கியின் நிதி நிலை அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கி சட்டபூர்வ ஆய்வு நடத்தியது. மேற்பார்வைக் கண்டுபிடிப்புகள் அறிக்கையை ஆய்வு செய்ததில், மேலே மேற்கோள் காட்டப்பட்ட ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும் அது தொடர்பான கடிதங்களின் அடிப்படையில், இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததற்காக வங்கி மீது ஏன் அபராதம் விதிக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் கூற அறிவுறுத்தி அறிக்கை அனுப்பப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கைக்கு வங்கியின் பதில் மற்றும் தனிப்பட்ட விசாரணையின் போது பெறப்பட்ட வாய்வழி சமர்ப்பிப்புகள் ஆகியவற்றை பரிசீலனை செய்த போது, வங்கி, இந்திய ரிசர்வ் வங்கியின் பின்வரும் உத்தரவுகளை மீறியது நிரூபிக்கப்பட்டதால், பண அபராதம் விதிக்கப்படவேண்டும் என்ற முடிவுக்கு இந்திய ரிசர்வ் வங்கி வந்தது:

(i) வங்கி, 'மேற்பார்வை செயல் கட்டமைப்பின்' வழிகாட்டல்களுக்கு மாறாக, தனிநபர் கடன் பெறுவதற்கான வரம்புக்கு அப்பாற்பட்ட கடன் வசதிகளை அளித்துள்ளது, டெர்ம் டெபாசிட்டுகளின் பிணையப் பாதுகாப்பிற்கு எதிரான கடன்களைத் தவிர புதிய கடன்கள் மற்றும் முன்பணங்கள் அளித்துள்ளது, பாரத ஸ்டேட் வங்கி வழங்கும் வைப்புகளின் வட்டி விகிதங்களை விட அதிகமாக வட்டி விகிதங்களை அளித்துள்ளது.

(ii) வங்கி, தனது CRAR, குறைந்தபட்ச ஒழுங்குமுறையான 9% -ஐ விட குறைவாக இருந்தபோதிலும், உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனத்தை திருப்பி அளித்துள்ளது.

இந்த நடவடிக்கை ஒழுங்குமுறை இணக்கத்தின் குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டது. இது வங்கி அதன் வாடிக்கையாளர்களுடன் கையெழுத்திட்ட எந்தவொரு பரிவர்த்தனை அல்லது ஒப்பந்தத்தின் செல்லுபடியை பாதிக்கும் நோக்கத்துடனானதல்ல. மேலும், இந்த பண அபராதம் விதிக்கப்படுவது, வங்கிக்கு எதிராக ரிசர்வ் வங்கியால் எடுக்கப்படும் வேறு எந்த நடவடிக்கைக்கும் பாரபட்சம் இல்லாமல் இருக்கும்.

(புனீத் பஞ்சோலி)
தலைமைப் பொது மேலாளர்

பத்திரிக்கை வெளியீடு: 2024-2025/1644